திருநெல்வேலி மாநகராட்சி

**2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் நாள் வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்**

**1)** திருநெல்வேலி மாநகராட்சியில் **233** துப்புரவு பணியாளர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல் பணிக்கு ரூ.**390.00** இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண் **105**, நாள் **10.12.2019–**ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் **1/2019–20** (பொ.சு) ன்படி தென்னிந்திய அளவில் The Hindu ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினமலர் தமிழ் நாளிதழிலும் **19.02.2020** அன்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் **20.02.2020** –அன்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மேற்படி பணிகளுக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு **24.03.2020–**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறை அல்லாத இரு உறை முறையிலான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் **3** எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் (1) Puliyoorsalai Labour Contract Co-operative Society Ltd, Mancode P.O., Kannyakumari District நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் தகுதியிழந்ததாக கருதப்பட்டு நிராகரிக்கப்பட்டது;. மீதமுள்ள (2) M/s.Southern Solid Waste Management Service, Mulagamoodu (Po), Kannyakumari District மற்றும் **(3)** M/s.Arunai Computer Forms, Vaniyambadi, Vellore District ஆகியோரது ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களுடைய விலைப்புள்ளி அட்டவணைகள் மட்டும் **02.04.2020** அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ.எண். | ஒப்பந்ததாரா பெயர் | துறையின் மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | சதவிகிதம் % |
|---|---|---|---|---|
| 1 | M/s.Southern Solid Waste Management Service, Mulagumoodu (Po), Kannyakumari District – 629 167 | **3,86,09,358/–** | **4,15,31,860/–** | மதிப்பீட்டை விட **7.57**% அதிகம் |
| **2** | M/s.Arunai Computer Forms, Vaniyambadi, Vellore District – 635 752 | | **4,36,28,749/–** | மதிப்பீட்டை விட **13.00**% அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Southern Solid Waste Management Service நிறுவனத்தின் விலைவிகிதம் மதிப்பீட்டைவிட **7.57**% அதிகமானதாக உள்ளதால், அது ஏற்கத்தக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு செய்ய முடிவு செய்து அதன்படி ஒப்பந்ததாரருக்கு **02.04.2020** அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்த நிறுவனம் தமது **08.04.2020**ம் தேதிய கடிதத்தில் இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட **7.57**%அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட **6.50**% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளது. இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.Southern Solid Waste Management Service நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.**4,11,18,966/–** ஆனது மதிப்பீட்டை விட **6.50**% அதிகமாக உள்ளதால் இது ஏற்கத்தக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க **08.04.2020** அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது **13.04.2020–**ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று மதிப்பீட்டை விட **6.50**%

அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.50% அதிகமான விலைவிகிதத்தில் பணியினை செய்யவும், தற்போது மேற்படி பணிக்கு தேவையான வேலை ஆட்களுக்கான கூலி எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் மதிப்பு | இரண்டாவது விலைக் குறைப்பிற்கு பின் M/s.Southern Solid Waste Management Service அவர்களின் ஒப்பந்தமதிப்பு |
|---|---|---|---|
| 1 | 233 துப்புரவு பணியாளர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல் | ரூ.3,86,09,358/– | ரூ.4,03,46,779/– மதிப்பீட்டை விட 4.50% அதிகம் |

எனவே, 13.04.2020–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Southern Solid Waste Management Service நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.4,03,46,779/– மதிப்பீட்டை விட 4.50% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் 233 துப்புரவு பணியாளர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல் பணி மேற்கொள்வது அத்தியாவசியமான பணியாக இருப்பதால் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 13.04.2020–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Southern Solid Waste Management Service நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.4,03,46,779/– மதிப்பீட்டை விட 4.50% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 1

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண் 1/2019–20 பொ.சு )

---

2) திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை இராமையன்பட்டி மற்றும் சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள நுண்உர செயலாக்க மையங்களுக்கு பொது சுகாதார வாகனங்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டு வருகின்றது. மேலும், பொது சுகாதாரப் பணிகளுக்கு 28 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி 28 வாகனங்களுக்கு 17 ஓட்டுநர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். மீதமுள்ள வாகனங்கள் ஓட்டுநர் உரிமம் பெற்று துப்புரவு பணியாளர்கள் மற்றும் சுயஉதவிக்குழு பணியாளர்களை கொண்டு இயக்கப்பட்டு வருகின்றது, ஒரு ஓட்டுநரே பணியேற்பாட்டின் கீழ் இரண்டு வாகனங்கள் இயக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. மேலும் மேற்படி ஓட்டுநர் விடுப்பில் சென்றுவிட்டால் வேறு ஓட்டுநரை அவரது பணிக்கு மாற்றப்பட வேண்டிய நிலையில் இருப்பதாலும் , ஓட்டுநர்களின் வேலை நேரம் காலை மணி 6 முதல் 2 மணி வரை இருப்பதால், அவசர காலங்களில் 2 மணிக்கு மேல் மற்ற நேரங்களில் பணிபுரியவும் ஓட்டுநர்கள் தேவைப்படுவதால் கூடுதலாக 15 ஓட்டுநர்களை வெளிக்கொணர்வு (Outsource) மூலம்

பணியமர்த்தி கொள்வதற்கும், மேற்படி ஓட்டுநர்களுக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண் M3/16361/2019, நாள் 02.07.2019–ம் தேதிய செயல்முறை ஆணையின்படி ஓட்டுநர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் ரூ.393/– (Employers contribution 13.36% தொகை ரூ.52.50, Employers State Insurance Corporation 4.75% தொகை ரூ.18.67) உள்பட ஒரு மாதத்திற்கு ஒரு ஓட்டுநருக்கான ஊதியத் தொகை ரூ.13,925/– என்ற அடிப்படையில் 15 ஓட்டுநர்களுக்குரிய ஒரு மாத ஊதியம் ரூ.2,08,875/– (13925 x 15) ஆகும்.

மேலும் மேற்படி ஓட்டுநர்களுக்கு வருடத்திற்கு 2 செட் சீருடை, தொழிலாளர் நலநிதி, சேவை கட்டணம் மற்றும் இதர செலவுகள் மற்றும் ஊதியம் உள்பட ஒரு வருட காலத்திறகு 15 ஓட்டுநர்களை வெளிக்கொணர்வு (Outsource) மூலம் பணியமர்த்தி கொள்வதற்கும், அதற்கு ஆகும் செலவுத் தொகை வருடத்திற்கு ரூ.27.50 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை இராமையன்பட்டி மற்றும் சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள நுண்உர செயலாக்க மையங்களுக்கு பொது சுகாதார வாகனங்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டு வருகின்றது. மேலும், பொது சுகாதாரப் பணிகளுக்கு 28 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி 28 வாகனங்களுக்கு 17 ஓட்டுநர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். மீதமுள்ள வாகனங்கள் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள துப்புரவு பணியாளர்கள் மற்றும் சுயஉதவிக்குழு பணியாளர்களை கொண்டு இயக்கப்பட்டு வருகின்றது. ஒரு ஓட்டுநரே பணியேற்பாட்டின் கீழ் இரண்டு வாகனங்கள் இயக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. மேலும், மேற்படி ஓட்டுநர் விடுப்பில் சென்றுவிட்டால் வேறு ஓட்டுநரை அவரது பணிக்கு மாற்றப்பட வேண்டிய நிலையில் இருப்பதாலும், ஓட்டுநர்களின் வேலை நேரம் காலை மணி 6 முதல் 2 மணி வரை இருப்பதால், அவசர காலங்களில் 2 மணிக்கு மேல் மற்ற நேரங்களில் பணிபுரியவும் ஓட்டுநர்கள் தேவைப்படுவதால், கூடுதலாக 15 ஓட்டுநர்களை வெளிக்கொணர்வு (Outsource) மூலம் பணியமர்த்தி கொள்வதற்கும், மேற்படி ஓட்டுநர்களுக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண் M3/16361/2019, நாள் 02.07.2019–ம் தேதிய செயல்முறை ஆணையின்படி ஓட்டுநர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் ரூ.393/– (Employers contribution 13.36% தொகை ரூ.52.50, Employers State Insurance Corporation 4.75% தொகை ரூ.18.67) உள்பட ஒரு மாதத்திற்கு ஒரு ஓட்டுநருக்கான ஊதியத் தொகை ரூ.13,925/– என்ற அடிப்படையில் 15 ஓட்டுநர்களுக்குரிய ஒரு மாத ஊதியம் ரூ.2,08,875/– (13925 x 15) ஆகும்.

மேலும் மேற்படி ஓட்டுநர்களுக்கு வருடத்திற்கு 2 செட் சீருடை, தொழிலாளர் நலநிதி, சேவை கட்டணம் மற்றும் இதர செலவுகள் மற்றும் ஊதியம் உள்பட ஒரு வருட காலத்திற்கு 15 ஓட்டுநர்களை வெளிக்கொணர்வு (Outsource) மூலம் பணியமர்த்தி கொள்வதற்கும் அதற்கு ஆகும் செலவுத் தொகை வருடத்திற்கு ரூ.27.50 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 2

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(எச்2/8467/2019–மை.அ)

---

3) திருநெல்வேலி மாநகராட்சியின் 2018–2019ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது,

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சியின் 2018–2019ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையினை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 3

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் சி1/3463/2019)

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, மாமன்றத் தீர்மானம் எண் 8, நாள் 07.06.2019ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணைப்படி உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்ட கீழ்க்காணும் ஆறு அலுவலர்களுக்கும் ஊதிய தொகுப்பு 36400–115700 Level 16 என்ற ஊதிய விகிதத்தில் நியமனம் செய்து அரசின் உறுதியாக்கம் பெற்று ஊதியம் வழங்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

1) திரு.ஏ.பைஜு, உதவிப் பொறியாளர்
2) திரு.எஸ்.நாகராஜன், உதவிப் பொறியாளர்
3) திரு.எஸ்.சங்கரநாராயணன், உதவிப் பொறியாளர்
4) திரு.எஸ்.சொரிமுத்துபட்டராஜா, உதவிப் பொறியாளர்
5) திரு.ஜி.பிலிப்அந்தோணி, உதவிப் பொறியாளர்
6) திரு.டி.சிவசுப்பிரமணியன், உதவிப் பொறியாளர்

மேற்காணும் பணியாளர்கள் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு அரசாணை எண் 297, நிதி ஊதிய குழு, நாள் 22.07.2013–ன்படி 37700–119500 Level 20 என்ற ஊதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்து அதனடிப்படையில் அரசின் உறுதியாக்கம் பெற்று வழங்கிடுமாறு கேட்டு விண்ணப்பித்ததன் அடிப்படையில் திருநெல்வேலி மாநகராட்சி உள்ளாட்சி நிதித் தணிக்கையில் தெளிவுரையினை கோரப்பட்டதில் துணை இயக்குநர், உள்ளாட்சித் நிதித் தணிக்கை அவர்களின் 13.03.2020ம் தேதிய கடிதத்தில் அரசாணை எண் 297, நிதித் (ஊதியம்) துறை, நாள் 22.07.2013–ன்படி உதவிப்பொறியாளர் பணியிடத்திற்கு 9330–34800 தரஊதியம் + ரூபாய் 5100/– என்பதன் அடிப்படையில் 7வது ஊதியக்குழு அரசாணை எண் 303, நிதித்துறை (ஊதியம்) நாள் 11.10.2017–ன்படி ஊதிய தொகுப்பு 37700–119500 Level 20 என்ற ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்திடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் 6 நபர்களுக்கும் உதவிப்பொறியாளர் பணியிடத்தில் ஊதிய தொகுப்பு 37700–119500 Level 20 என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் திருத்தி நிர்ணயம் செய்து அரசின் உறுதியாக்கம் பெற்று ஊதியம் வழங்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, உள்ளாட்சி நிதித் தணிக்கை துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி அரசாணை எண் 297, நிதித் (ஊதியக்குழு) துறை, நாள் 22.07.2013–ன்படி மேற்கண்ட 6 நபர்களுக்கும் உதவிப்பொறியாளர் பணியிடத்தில் ஊதிய தொகுப்பு 37700–119500 Level 20 என்ற ஊதிய விகிதத்தில்ஊதியம்திருத்தி நிர்ணயம் செய்து அரசின் உறுதியாக்கம் பெற்று ஊதியம் வழங்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 4

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் சி1/1080/2018)

---

5) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 40, கதவு எண் 278, பாரதியார் தெரு கட்டிடத்திற்கு பாதாள சாக்கடை சேவைக்கட்டணம் வரிவிதிப்பு எண்

146/400147–க்கு 2019–2010 முடிய நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டுள்ளதாகவும், அதே கதவு எண்ணுக்கு தவறுதலாக உள்ள மற்றுமொரு பாதாள சாக்கடை சேவை கட்டணம் வரிவிதிப்பு எண் 146/400150–ஐ இரத்து செய்யவும், மேற்படி வரிவிதிப்பு எண்ணிற்கு 2014–15 முதல் 2019–2020 முடிய நிலுவையாக உள்ள தொகை ரூ.2880/–ஐ நீக்கம் செய்ய கோரியுள்ள திரு.ஏ.வேலாயுதம் என்பவரின் 09.01.2020ம் தேதிய மனு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 40, கதவு எண் 278, பாரதியார் தெரு கட்டிடத்திற்கு பாதாள சாக்கடை சேவைக் கட்டணம் வரிவிதிப்பு எண் 146/400147–ன்படி எழுப்பப்பட்டுள்ளது. மேற்படி வரிவிதிப்பு எண்ணிற்கு 2019–2020 முடிய தொகை நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டுள்து. அதே கதவு எண்ணுக்கு மற்றுமொரு பாதாள சாக்கடை சேவை கட்டண வரிவிதிப்பு எண் 146/400150 தவறுதலாக எழுப்பப்பட்டுள்ளதால், அதனை கணினியில் இரத்து செய்ய சம்பந்தப்பட்ட பகுதி இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களால் இடத்தினை நேராய்வு செய்து பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட விபரப்படி தவறுதலாக உள்ள பாதாள சாக்கடை வரிவிதிப்பு எண் 146/400150–ஐ கணினியில் இரத்து செய்யவும், மேற்படி வரிவிதிப்பு எண்ணிற்கு 2014–2015 முதல் 2019–2020 முடிய உள்ள நிலுவைத் தொகை ரூ.2880/–ஐ கணினியில் நீக்கம் செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 5

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(கோப்பு எண் அ4/0078/2020–திலி)

---